DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 13/2020

List of Witness : Lw2

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அழகர்சாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பிச்சைமுத்து | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 16/06/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் இடும்பகுடும்பன்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து தோட்டத்துக்காரர் ஆவார். சுமார் 6,7 வருடங்களுக்கு முன்பு நங்காஞ்சி ஆற்று பாலத்தில் சண்டை நடந்து கொண்டு இருந்தது. அங்கு கூட்டமாக இருந்தது. என்ன என்று நான் பார்க்க சென்றேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 22.05.2019 ஆம் தேதி மாலை 5.30 மணியளவில் எனது தம்பி அவரது வீட்டு அருகே உள்ள நங்காஞ்சி ஆற்று பாலத்தில் நின்று கொண்டிருந்தபோது மேற்டி ஜெயபிரகாஷ் எனது தம்பியிடம் வந்து ஏண்டா கொத்தா, தாயோலி மகனே ஏண்டா எங்கிட்ட பிரச்சனை பண்ணுற என்று அசிங்கமாக பேசி சண்டை போட்டார் எனவும், அதற்கு எனது தம்பி ஏன் இப்படி தேவையில்லாம என்னிடம் சண்டை போடுறீங்க பேசமா வேலையை பாத்துட்டுபோடா என கூறி எனது தம்பி தங்கராஜை கீழே தள்ளிவிட்டார் என்றும், எனது தம்பி தங்கராஜ் கீழே விழுந்த சமயம் அங்கு அருகில் இருந்த கம்பை எடுத்து எனது தம்பியின் தலையில் அடித்துவிட்டார் என்றும், அதில்

எனது தம்பிக்கு தலையில் வலதுபுறம் ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் எனது வீட்டருகே நின்று பார்த்துக்கொண்டிருந்த நானும், எனது தம்பி மனைவி தனலட்சுமி இருவரும் தடுத்தோம் என்றும், மேற்படி ஜெயபிரகாஷ் எனது தம்பியை பார்த்து என்கிட்ட பிரச்சனை செய்தால் உன்னை அடித்து கொன்றுபுதைத்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து ஓடிவிட்டார்கள் என்றும், காயம்பட்ட எனது தம்பியை எனது தம்பியின் மனைவி ஆம்புலன்ஸில் ஏற்றி ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார் என்றும், இது சம்பந்தமாக அ.சா.1 அம்பிளிக்கை காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரி எனது அண்ணன் மகளை திருமணம் செய்துள்ளார். எனக்கு மருமகன் முறை என்பதாலும் தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.16 17:56:08 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 16/06/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 13/2020

List of Witness : Lw3

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | தனலட்சுமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | தங்கராஜ் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 16/06/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் இடும்பகுடும்பன்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது மருமகன் ஆவார். சுமார் 6,7 வருடங்களுக்கு முன்பு நான் வேலைக்கு சென்றுவிட்டதால் சம்பவத்தை குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 22.05.2019 ஆம் தேதி மாலை 5.30 மணியளவில் எங்கள் வீட்டு அருகே உள்ள நங்காஞ்சி ஆற்று பாலத்தில் நின்று கொண்டிருந்தபோது மேற்டி ஜெயபிரகாஷ் எனது கணவரிடம் வந்து ஏண்டா கொத்தா, தாயோலி மகனே ஏண்டா எங்கிட்ட பிரச்சனை பண்ணுற என்று அசிங்கமாக பேசி சண்டை போட்டார் எனவும், அதற்கு எனது கணவர் ஏன் இப்படி தேவையில்லாம என்னிடம் சண்டை போடுறீங்க பேசமா வேலையை பாத்துட்டுபோடா என கூறி ஜெயபிரகாஷ் எனது கணவரை கீழே தள்ளிவிட்டார் என்றும், எனது கணவர் கீழே விழுந்த சமயம் அங்கு அருகில் இருந்த கம்பை எடுத்து எனது கணவரின் தலையில் அடித்துவிட்டார் என்றும், அதில் எனது கணவருக்கு தலையில் வலதுபுறம் ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் எங்கள் வீட்டருகே நின்று பார்த்துக்கொண்டிருந்த நானும், எனது மச்சான் அழகர்சாமி ஆகிய

இருவரும் தடுத்தோம் என்றும், மேற்படி ஜெயபிரகாஷ் எனது கணவரை பார்த்து என் கிட்ட பிரச்சனை செய்தால் உன்னை அடித்து கொன்றுபுதைத்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து ஓடிவிட்டார்கள் என்றும், காயம்பட்ட எனது கணவரை நான் ஆம்புலன்ஸில் ஏற்றி ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன் என்றும், இது சம்பந்தமாக அ.சா.1 அம்பிளிக்கை காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரி எனது மருமகன் என்பதால் தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.16 17:56:15 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 16/06/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 13/2020

List of Witness : Lw5

Prosecution Witness : PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | விஜயகுமார் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | கணேசன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 16/06/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் இடும்பகுடும்பன்பட்டியில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 3,4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 9.00 மணியளவில் எனது வீட்டின் அருகே உள்ள கேனி மேடு அருகில் போலீசார் அங்கே இருந்தார்கள். நானும், அப்போது தான் அங்கே வந்து இருந்தேன். அம்பிளிக்கை போலீசார் என்னிடம் சாட்சியாக கையொப்பம் செய்து தரும்படியாக கேட்டார்கள். நான் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்தேன். நான் எதற்காக கையொப்பம் செய்து கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. **பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 25.05.2019 ஆம் தேதி 8.30 மணிக்கு நானும், எனது ஊரைச்சேர்ந்த செல்லமுத்து மகன் செல்வன் என்பவரும் சொந்த வேலையாக இடும்பகுடும்பன்பட்டி நங்காஞ்சி ஆற்று பாலம் அருகே சென்று கொண்டிருந்தோம் என்றும், அங்கு வந்த அம்பிளிக்கை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் வழக்கின் சம்பவத்தையும்

சம்பவ இடத்தையும் எடுத்துக்கூறி எங்கள் இருவர் முன்னிலையில் மாதிரி வரைபடமும், பார்வை மகசரும் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், செல்லமுத்து மகன் செல்வன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் கையெழுத்து பெறும்போது எழுதப்படாத வெள்ளைத்தாளில் தான் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்து கொடுத்த பார்வை மகசரில் என்ன விவரம் எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.16 17:56:20 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 16/06/2026